# ''அண்ணா பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு அந்தஸ்து தேவையில்லை'': மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம்

## ''சிறப்பு அந்தஸ்து செய்வதை அரசின் நிதி கொண்டே செய்திட முடியும்'': அமைச்சர் அன்பழகன் பேட்டி

சென்னை, நவ.3–

''அண்ணா பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு அந்தஸ்து தேவையில்லை'' என மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்திற்கு உயர் சிறப்பு அந்தஸ்து தரலாம் என பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.கே. சூரப்பா மத்திய மனித வளத் துறைக்கு கடிதம் ஒன்றை தன்னிச்சையாக எழுதி இருந்தார். அதில் பல்வேறு விஷயங்களை அவர் குறிப்பிட்டு இருந்ததாக கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து தற்போதைய நிலையிலேயே பல்கலைக்கழகத்தை மேம்படுத்த தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் உயர் சிறப்பு அந்தஸ்து தேவையில்லை என்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு அந்தஸ்து தேவையில்லை என மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதி உள்ளது. அதில் துணை வேந்தர் சூரப்பா கூறியது போல அண்ணா பல்கலைக்கழகத்தால் தனியாக நிதி திரட்ட முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிஷயம் குறித்து அமைச்சர் கே.பி.அன்பழகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

சிறப்பு அந்தஸ்து கொண்டு என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதுபோலவே மாநில அரசின் கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு நாங்களும் செய்ய முடியும். இருக்கும் புகழ், பிரபலம் காரணமாகத் தான் பல்கலைக்கழகத்துக்கு சிறப்பு அந்தஸ்து மத்திய அரசால் அளிக்க வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. தன்னுடைய உத்தேசத்தை மாநில அரசு நிராகரித்திருப்பது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சூரப்பா கருத்து சொல்லியிருக்கிறார். அது பற்றி எனக்கு தெரியாது.

### 350 கோடி பற்றாக்குறை

தன்னுடைய உள்வளங்கள் மூலம் பல்கலைக்கழகமே ஆண்டுக்கு ரூ.314 கோடி என்ற வீதத்தில் 5 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.1570 கோடியைத் திரட்டிக் கொள்ள முடியும் என்று சூரப்பா, மத்திய அரசுக்கு கடிதம் எழுதி இருக்கிறார். ஆண்டுதோறும் வழக்கமாக ஒதுக்கப்படும் மானியங்களைத் தவிர, கூடுதல் மானியங்களைத் தவிர வேறு எந்த விதத்திலும் தனியாக தேவைக்கு விண்ணப்பிக்க முடியாது. ஆகவே சிறப்பு அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்ள முடியாது.

இவ்வாறு அன்பழகன் கூறினார்.

கடந்த நிதியாண்டில் பல்கலைக்கழகத்துக்கு ரூ.349 கோடியே 70 லட்சம் அளவுக்கு ஏற்பட்டிருந்ததாகவும் ஒரு தகவல் கூறுகிறது.

### ஆலோசனைக்குழுவில் 5 அமைச்சர்கள்

உயர் சிறப்பு அந்தஸ்து குறித்து ஆலோசிக்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவில், கே.பி. அன்பழகன், செங்கோட்டையன், தங்கமணி, ஜெயக்குமார், சி.வி.சண்முகம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# முன்னாள் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் காலமானார்: எடப்பாடி இரங்கல்

சென்னை, நவ.3–



தமிழ்நாடு முன்னாள் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் (வயது 92) உடல் நல குறைவால் சென்னையில் காலமானார்.

ஓய்வு பெற்ற முன்னாள் டிஜிபி ராதாகிருஷ்ணன் வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவால் இன்று காலமானார். சென்னையில் உள்ள அவரது வீட்டில் இறுதிச்சடங்கு நடைபெறுகிறது. அவரது உடலுக்கு தமிழக காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### எடப்பாடி இரங்கல்

இதுகுறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு காவல்துறை முன்னாள் தலைமை இயக்குநர் கே. ராதாகிருஷ்ணன் உடல்நலக் குறைவால் இன்று (3–ந் தேதி) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

ராதாகிருஷ்ணன் சென்னை மாநகர காவல் ஆணையர், காவல் துறை தலைவர் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தில் காவல் துறை இயக்குநர் போன்ற உயர்ந்த பதவிகளில் நியமனம் செய்யப்பட்டு, திறம்பட பணியாற்றியவர் என்ற பெருமைக்குரியவர். இவர் எழுத்தாளர், சமூக ஆர்வலர் போன்ற பன்முகத் தன்மை கொண்டவர். இவர் ''ராக்கி'' என்ற பெயரில் நகைச்சுவை கட்டுரை எழுதியவர்.

ராதாகிருஷ்ணனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை, காவல்துறை சிறப்பு இயக்குநராக (சட்டம் மற்றும் ஒழுங்கு) நியமிக்கப்பட்டுள்ள ராஜேஷ் தாஸ் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் 6–ந் தேதி எடப்பாடி பழனிசாமி ஆய்வு

சென்னை, நவ.3–

கொரோனா பரவல் தடுப்பு பணிகள் குறித்து நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் 6–ந் தேதியன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு மேற்கொள்கிறார்.

கொரோனா தடுப்பு பணிகள், மாவட்ட வளர்ச்சி பணிகள் போன்றவை குறித்து ஆய்வு செய்வதற்காக மாவட்டந்தோறும் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடந்த சில மாதங்களாக பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் இதுவரை 25 மாவட்டங்களுக்கு அவர் நேரில் சென்று வந்துள்ளார்.

மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் ஆய்வு மேற்கொண்டதோடு, அந்த மாவட்டங்களில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைப்பது, புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவது, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்குவது ஆகியவற்றையும் எடப்பாடி பழனிசாமி செயல்படுத்தி வருகிறார். அதோடு, அந்த மாவட்டங்களில் உள்ள தொழில்முனைவோர்களுடனும், விவசாய பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுயஉதவி குழுவினருடனும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கலந்து பேசுகிறார்.

அதுபோல தற்போது நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு 6ந் தேதி முதலமைச்சர் பயணம் மேற்கொள்ள உள்ளார். கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து அந்த மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு மேற்கொள்வார்.

மேலும், 10ந் தேதி கன்னியாகுமரி, 11ந் தேதி தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்று தெரிகிறது.




# 19 பேருக்கு 'தமிழ்ச் செம்மல் விருது'...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜதாசன் (தேனி மாவட்டம்), முனைவர் இரா. இளவரசு (விருதுநகர் மாவட்டம்), க. அழகிரிபாண்டியன் (திருநெல்வேலி மாவட்டம்), நம். சீநிவாசன் (தூத்துக்குடி மாவட்டம்), குமரிஆதவன் (கன்னியாகுமரி மாவட்டம்), ந. கருணாநிதி (திருப்பத்தூர் மாவட்டம்), வத்சலா சேதுராமன் (செங்கல்பட்டு மாவட்டம்), த. தினகரன் (ராணிப்பேட்டை மாவட்டம்), உமாகல்யாணி (தென்காசி மாவட்டம்) மற்றும் பெ. அறிவழகன் (கள்ளக்குறிச்சி மாவட்டம்) ஆகிய 37 விருதாளர்களில்,

19 விருதாளர்களுக்கு முதலமைச்சர் இன்று தமிழ்ச் செம்மல் விருதிற்கான விருதுத் தொகை 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார்.

தமிழ்ச் செம்மல் விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட இதர விருதாளர்களுக்கு அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் முன்னிலையில் அமைச்சர்களால் தமிழ்ச் செம்மல் விருதுகள் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், மின்சாரம், மதுவிலக்கு துறை அமைச்சர் பி.தங்கமணி, மீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன், தமிழ்ப் பண்பாடு துறை அமைச்சர் க.பாண்டியராஜன்,

தலைமைச் செயலாளர் க. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் மகேசன் காசிராஜன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 3 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

# தீயணைப்புத் துறை டிஜிபியாக ஜாபர் சேட் நியமனம்

சென்னை, நவ.3

தமிழக காவல்துறையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகள் இன்று பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இது குறித்து தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கே.பிரபாகர் வெளியிட்டுள்ள உத்தரவு வருமாறு:–

குடிமைப்பொருள்கடத்தல்தடுப்புப் பிரிவு டிஜிபியாக இருந்த எம்.எஸ். ஜாஃபர் சேட், தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை இயக்குநராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இது வரை டாக்டர் சி. சைலேந்திர பாபுவிடம் கூடுதல் பொறுப்பாக இருந்த தீயணைப்புத் துறை டிஜிபி பதவி, தற்போது ஜாபர் சேட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜாபர் சேட் இதுவரை வகித்து வந்த குடிமைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு டிஜிபி பதவியை, இனி சென்னை ரெயில்வே துறை டிஜிபியாக இருக்கும் சைலேந்திர பாபு கூடுதலாக கவனிப்பார். மத்திய அரசன் அயல் பணியில் இருந்த ஏ.டி. துரைக்குமார் சென்னை காவல்துறையின் நிர்வாகப் பிரிவில் டிஐஜியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.



இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, தூத்துக்குடி வடக்கு மாவட்டம், விளாத்திகுளம் ஒன்றிய தி.மு.க. முன்னாள் செயலாளரும், 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தி.மு.க. சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டவருமான எஸ்.பீமராஜ் நேரில் சந்தித்து, தன்னைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினராக இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சருமான கடம்பூர் சி. ராஜூ, கழக இலக்கிய அணி இணைச் செயலாளரும், விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பி. சின்னப்பன், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளர் கருப்பூர் சீனி (எ) ராஜகோபால் உள்ளிட்ட நிர்வாகிகளும் உடனிருந்தனர்.


## விர்கோ பாலிமர்ஸ் (இந்தியா) லிமிடெட்

VIRGO POLYMER (INDIA) LTD

CIN: L25200TN1985PLC011622

பதிவு அலுவலகம்: A1A, MMDA INDL COMPLEX, மறைமலை நகர், காஞ்சீபுரம்–603 209

30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ.லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.09.2020 தணிக்கை யாகாதது | முடிந்த காலாண்டு 30.09.2019 தணிக்கை யாகாதது | முடிந்த ஆண்டு 31.03.2020 தணிக்கை யானது |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 1,907.72 | 2,290.98 | 8,332.83 |
| 2. | வரிக்கு பின் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து நிகர லாபம்/(நஷ்டம்) | 59.69 | 8.96 | 27.92 |
| 3. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 59.69 | 8.96 | 27.92 |
| 4. | சமபங்கு மூலதனம் | 333.61 | 333.61 | 333.61 |
| 5. | ரிசர்வுகள் (கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | - | - | 1289.35 |
| 6. | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம்(அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (ஒன்றின் மதிப்பு ரூ.10) அடிப்படை மற்றும் டைலூட்டட் (வருடாந்திரமல்ல) | 1.79 | 0.27 | 0.84 |
| 7. | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) (ஒன்றின் மதிப்பு ரூ.10) அடிப்படை மற்றும் டைலூட்டட் (வருடாந்திரமல்ல) | 1.79 | 0.27 | 0.84 |

குறிப்புகள்:

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது.
2. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக

விவேக் ராம்சிசாரியா

செயல் தலைவர்

இடம்: சென்னை

தேதி: 02/11/2020

## நகை ஏல அறிவிப்பு

முத்தழகு பைனான்ஸ் (பி) லிட்

எங்கள் நிறுவனத்தில் கீழ்கண்ட கிளைகளில் 31.07.2019 வரையிலான காலத்தில் அடமானம் வைக்கப்பட்டு முடிக்கப்பெறாத நகைக்கடனுக்காக பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் ஏல அறிவிப்பைப் பெற்று இன்றைய தேதி வரை மீட்கப்படாத மற்றும் அவ்விதம் அனுப்பப்பட்ட அஞ்சலைப் பெறாத அடகு வைத்தவர்களின் நகைகள் அரசு ஒப்புதல் பெற்ற ஏலதாரர் M/s. Bohra's Auctioneers , West Mambalam, Chennai-33. என்ற நிறுவனத்தால் 25.11.2020 அன்று காலை 11.00 மணிக்கு கிளைகளின் அலுவலகத்தில் ஏலம்விடப்படும். BRANCHES - ANTHIYUR: JL-1346,JL-1351,JL-1358,JL1375,JL1451,JL-1473,JL-1553,JL1559, JL-1563,JL-1585,JL-1595,JL-1604,JL-1612,JL-1623,JL-1663,JL-1691,JL-1694,JL-1720,JL-1724,JL-1725,JL-1736, JL-1745,JL-1750,JL-1755,JL-1771.AVADI: 1037,1038,1064,1066,1076,1100,1125,1138,1154, 1175,1811,1881,1889, 1915. BHAVANI: JL-1305,JL-1309,JL-1394,JL-1425,JL-1453,JL-1457,JL-1464,JL-1479,JL-1485,JL-1519,JL-1522, JL-1528,JL-1529,JL-1539,JL-1554,JL-1561,JL-1570,JL-1590,JL-1592,JL-1603.CHINMAYA NAGAR:JL-1757,JL1768, JL1790. GOBI:1292,1328,JL-1486,JL-1498,JL-1545,JL-1564.GORIPALAYAM:3039,3054. GUDIYATHAM: 1216,1339, 1357, 1361,1421,1423,1439,1441.KANCHIPURAM: JL-6616,JL-6620,JL-6630,JL-6634. JAIHINDPURAM:JL-1217. KANGEYAM: JL-1096,JL-1102,JL-1149,JL-1154,JL-1180.P.N.PUDUR COVAI: JL-1056,JL-1063,JL-1078,JL-1083. PERUNDURAI:JL13302,JL13328,JL13349,JL13356,JL13361,JL13365,JL13388,JL13478, JL13486,JL13544,JL13552, JL13566,JL13575,JL13603,JL13604,JL13623,JL13648,JL13662,JL13671, JL13680,JL13698, JL13700, JL13714,JL13733, JL13748,JL13756,JL13775,JL13777,JL13329.PERAMBALUR:JL-1112,JL-1123,JL-1172,JL-1211.PERAMBUR: 1196, 1272, 1281,2030,2032,2043. PALLADAM:JL-1657.ROYAPETTAH:1030,1047,1050. SENGOTTAI:JL2187,JL-2276,JL-2286,JL-2315.SALEM: JL1068, JL1092,JL1102. TENKASI: JL1457,JL1490, JL1499, JL1503, JL1508,JL1509,JL1550,JL1587,JL1712, JL1742,JL1744.THIRUNELVELI: JL1125.TRICHY: JL-1129.THIRUVALLUR:JL-1129,JL-1131,JL-1149.VELLORE: JL1177, JL1212,JL1216.VILLUPURAM: 1431,1484,1504,1562,1577,1723, 1740,1756,1778,1815,1888.

Note:Customers can release the gold ornaments upto 24/11/2020.

குறிப்பிட்ட தேதியில் ஏதாவதொரு காரணத்தால் ஏலம் நடத்தப்படவில்லையென்றால் 26.11.2020 அன்று காலை 11.00 மணிக்கு முத்தழகு பைனான்ஸ் (பி) லிமிடெட், 213, 2வது தளம்,மாகாவீர் காம்ப்ளெக்ஸ், ராயப்பேட்டை நெடுஞ்சாலை,ராயப்பேட்டை,சென்னை-600014.என்ற விலாசத்தில் உள்ள கம்பெனியின் அலுவலக கட்டிடத்தில் பகிரங்க ஏலம் நடைபெறும் என்பது இந்த அறிவிப்பின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது மேலும் ஏல விபரங்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்த விபரங்கள் எங்கள் கிளைகளில் உள்ள தகவல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள்; Pan card, Photo ID Proof, GSTIN Number( incase Registered Dealers) உடன் கலந்து கொள்ளவும்.

M/S.BOHRA'S AUCTIONEERS

## சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்

CIN: L25199TN1989PLC017137

**பதிவு அலுவலகம்:** B-11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி 601 201

**கார்ப்பரேட் அலுவலகம்:** எண்.66, நியூ ஆவடி ரோடு, 2வது தளம், எஸ்2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010

Tel:+91 44 2660 1313

E-mail: southernlatexltd@yahoo.com,

Website: www.southernlatex.in

### அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29(1)(எ) மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, 30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டம் புதன்கிழமை, 11 நவம்பர் 2020 அன்று மாலை 3.00 மணிக்கு கார்ப்பரேட் அலுவலகம்: எண்.66, நியூ ஆவடி சாலை, 2வது மாடி, S2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010-ல் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் வலைதளம் www.southernlatex.in மற்றும் பங்குகள் பட்டியலிடப்படும் பங்கு சந்தை வலைதளம் பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com-ல் உள்ளது.

**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக**

ஒப்பம்/-

**கவிதா சி**

கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை

தேதி : 03 நவம்பர், 2020

**BEFORE THE CONSUMER DISPUTES REDRESSAL FORUM AT CHENNAI-SOUTH AT CHENNAI**

**C.C. No. 285 of 2019**

1.J. Sundararajan
2.Mrs. V. Anandhi
... COMPLAINANTS
-Vs-
Mr. B. Vijay Aravind
Proprietor :M/s. Rudraksh Housing
...OPPOSITE PARTY

To,
Mr. B. Vijay Aravind
Proprietor :M/s. Rudraksh Housing
Flat no – B-3, 2nd Floor
Aswini Appartment
Old no-21B, New no -2
1st Street , Zakaria Colony
Kodambakkam, Chennai- 600 024

Please take notice that in the above Complaint filed by our client, the Hon'ble Consumer Disputes Redressal Forum, Chennai South was pleased to order notice to you on 24.10.2020 returnable by 14.12.2020. Kindly be present before the Hon'ble Consumer Disputes Redressal Forum, Chennai South on 14.12.2020, failing which the case will be decided on merits in your absence.

M/s.G. Guruprasath
G.Rajkumar
Counsel for Complainants

## தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

THE RAMCO CEMENTS LIMITED RAMCO

பதிவு அலுவலகம்: 'ராமமந்திரம்', ராஜபாளையம் 626 117.

கார்ப்பரேட் அலுவலகம்: எண். 98–ஏ, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சென்னை–600 004.

CIN :L26941TN1957PLC003566; E-mail: ksn@ramcocements.co.in

செப்டம்பர் 30, 2020–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கையாகாத தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ.இலட்சங்களில்)

| வ. எண். | விவரங்கள் | காலாண்டு முடிவு | | | அரையாண்டு முடிவு | | ஆண்டு முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது 30.09.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.06.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2019 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2019 | தணிக்கை செய்யப்பட்டது 31.03.2020 |
| 1 | மொத்த வருவாய் | 127347 | 105679 | 133208 | 233026 | 272890 | 542280 |
| 2 | வரி செலுத்துவதற்கு முன்பான காலத்திற்கான நிகர லாபம் | 34262 | 15750 | 21621 | 50012 | 49614 | 79224 |
| 3 | வரி செலுத்திய பின்பான காலத்திற்கான நிகர லாபம் | | | | | | |
| | – மூல சரிவிகித பங்குதாரர்களுக்கு உடையது | 24352 | 11725 | 17226 | 36077 | 36646 | 60414 |
| | – கட்டுப்படுத்தாத வட்டிக்கு உடையது | 70 | 25 | 82 | 95 | 127 | 93 |
| | மொத்தம் | 24422 | 11750 | 17308 | 36172 | 36773 | 60507 |
| 4 | வரி செலுத்திய பின்பான காலத்திற்கான மொத்த ஒருங்கிணைந்த வருவாய் | | | | | | |
| | – மூல சரிவிகித பங்குதாரர்களுக்கு உடையது | 24269 | 11702 | 17167 | 35971 | 36713 | 59918 |
| | – கட்டுப்படுத்தாத வட்டிக்கு உடையது | 69 | 25 | 82 | 94 | 127 | 94 |
| | மொத்தம் | 24338 | 11727 | 17249 | 36065 | 36840 | 60012 |
| 5 | செலுத்தப்பட்ட சரிவிகித மூலதனப் பங்கு | | | | 2358 | 2356 | 2356 |
| 6 | இதர சரிவிகிதம் | | | | 535142 | 479529 | 497779 |
| 7 | நிகர மதிப்பு | | | | 537500 | 481885 | 500135 |
| 8 | செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு | | | | 291968 | 245061 | 302409 |
| 9 | மூலதனத் திருப்பிச் செலுத்தலுக்கான இருப்புத் தொகை | | | | 163 | 163 | 163 |
| 10 | கடன் – சமவிகித வீதம் (மடங்குகளில்) | | | | 0.54 | 0.51 | 0.60 |
| 11 | கடன் சேவை அடக்க வீதம் (மடங்குகளில்) | | | | 2.20 | 3.72 | 2.89 |
| 12 | வட்டிச் சேவை அடக்க வீதம் (மடங்குகளில்) | | | | 4.95 | 8.24 | 5.57 |
| 13 | ரூ.1/– மதிப்புள்ள பங்கு ஒன்றுக்கான வருமானம் (ரூ.) (வருடாந்திரமாக்கப்படாதது) | | | | | | |
| | அடிப்படை | 11 | 5 | 7 | 16 | 16 | 26 |
| | பெருக்கம் | 11 | 5 | 5 | 16 | 16 | 26 |

குறிப்புகள்:

1. மேலே உள்ளவை SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) ஒழுங்குவிதிகள் 2015, ஒழுங்குவிதி 33–இன் கீழ் பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்டுள்ள காலாண்டு / அரையாண்டுக்கான விரிவான நிதிநிலை முடிவின் சுருக்கமாகும். காலாண்டு / அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் மும்பைப் பங்குச் சந்தையின் www.bseindia.com இணையதளத்திலும் தேசியப் பங்குச் சந்தையின் www.nseindia.com இணையதளத்திலும் நிறுவனத்தின் www.ramcocements.in இணையதளத்திலும் கிடைக்கும்.
2. மேலே உள்ள தணிக்கை செய்யப்படாத முடிவுகளின் தொகுப்பு தணிக்கைக் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளதோடு 2.11.2020 அன்று நடைபெற்ற இயக்குனர் குழுமக் கூட்டத்தில் ஒப்புதலும் அளிக்கப் பெற்றுள்ளன. மேற்கண்ட முடிவுகளை சட்டப்படியான தணிக்கையாளர்கள் வரையறுக்கப்பட்ட ஆய்வை செய்துள்ளனர்.
3. தனித்த நிதிநிலைத் தகவலின் முக்கிய கூறுகள்

| விவரங்கள் | காலாண்டு முடிவு | | | அரையாண்டு முடிவு | | ஆண்டு முடிவு |
|---|---|---|---|---|---|---|
| | தணிக்கை செய்யப்படாதது 30.09.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.06.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2019 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2020 | தணிக்கை செய்யப்படாதது 30.09.2019 | தணிக்கை செய்யப்பட்டது 31.03.2020 |
| மொத்த வருவாய் | 126531 | 105190 | 132588 | 231721 | 271794 | 540564 |
| வரிக்கு செலுத்துவதற்கு முன்பான நிகர லாபம் | 33833 | 15571 | 21316 | 49404 | 49133 | 78721 |
| வரி செலுத்திய பின்பான நிகர லாபம் | 23577 | 10960 | 16815 | 34537 | 36012 | 60109 |

4. முந்தைய காலக்கட்டத்தின் புள்ளிவிவரங்கள் தேவையான இடங்களில் மறுசேர்க்கை / மறுகுறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இடம் : சென்னை

நாள் : 02.11.2020

தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்– க்காக

ஒம்/P.R. வெங்கட்ராம ராஜா,

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்.